5. கவன ஈர்ப்பு

முகவை மாவட்டத்தில் புது வழித்தடங்கள் ஏற்படுத்துவது குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

''முகவை மாவட்டம், திருவில்லியுத்தூர் தொகுதியில் பாட்டாகுளம், விழுப்பனூர், கூளம்பட்டி ஆகிய ஊர்களுக்கு பஸ் விடவேண்டும் எனக்கூறி பொதுமக்கள் மறியல் போராட்டங்களில் ஈடுபடுவதின் காரணமாக நிலவும் பதட்ட நிலை குறித்து''.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே. பாட்டாகுளம், விழுப்பனூர் முதலிய கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி செய்யும் நோக்கத்துடன் திருவில்லிப்புத்தூரிலிருந்து மல்லி, விழுப்பானூர், பாட்டாகுளம் கிருஷ்ணன் கோயில் ஆகிய ஊர்களின் வழியாக மீண்டும் திருவில்லிபுத்தூர் வந்து சேரும் வண்ணம் புதிய புறநகர் வழித்தடத்துக்கான விண்ணப்பங்கள் முகவை மாவட்டப் போக்குவரத்து அதிகாரியால் கோரப் பட்டன. ஆகவே முகவை மாவட்டப்போக்குவரத்து அதிகாரி இப்பேருந்து உரிமையாளருக்கே இவ்வழித்தட உரிமத்தை வழங்க முடிவு செய்துள்ளார். போக்குவரத்து அதிகாரியால் இவ்வழித்தடத்திற்கு 24—11—78ஆம் நாளன்று உரிமம் வழங்கப்பட்டுள்ளது. 1940ஆம் ஆண்டின் தமிழ்நாடு மோட்டார் வண்டிகளின் 163 ஆம் விதியின்படி நான்குமாத காலத்திற்குள் உரிமம் வழங்கப்பட்டவர் வழித்தடத்தினில் இயங்கக்கூடிய வரைவை போக்குவரத்து அதிகாரியின் முன்னர் சமர்ப்பித்து உரிமம் பெற வேண்டும். உரிமையாளருக்கு 23—3—1979ஆம் நாள் முடிய வரைவை சமர்ப்பிக்க காலவரை உள்ளது. எனவே இன்னும் 9 தினங்களுக்குள் இவ்வழித்தடத்தில் பேருந்து இயங்கும்.

மேற்குறிப்பிட்ட விவரங்கள் பஸ் மறியல் போராட்டத்தில் ஈடுபட முனைந்தோருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே இது பற்றி சட்டமன்றப் பேரவையில் விவாதிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இன்னும் 9 நாட்களுக்குள் அங்கே பஸ் விடப்பட்டு விடும் என்று சொல்லியிருக்கிறார். அதற்காக அவருக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த

தொகுதி யூனியன் ரோடு நல்ல முறையில் இருக்கிறது. அதற்காகவும் அவருக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற முறை நான் திருவில்லிப்புத்தூரில் சுற்றுப்பயணம் செய்தபோது அங்குள்ள படித்த சகோதரிகள், 40, 50 பேர்கள் என்னிடம், நாங்கள் திருமணம் ஆகாமல் இருக்கிறோம் இங்கே பெண் பார்க்க வரவேண்டியவர்கள் டவுனிலிருந்து வரவேண்டும். அவர்கள் வருவதற்கு சரியான போக்குவரத்து இல்லை, காரில் தான் வரவேண்டும். சம்பந்தம் செய்ய வருபவர்கள் இதனால் துன்பப்படுகிறார்கள். ஆகவே எங்களுக்குத் திருமணம் ஆவதற்காவது சீக்கிரம் பேருந்துகளை விட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆகவே அமைச்சர் அவர்களை தகப்பனார் நிலையில் சிந்தித்து அந்த இடங்களிலே விரைவில் பஸ் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் பேருந்து விடாமல் இருப்பதன் காரணமாக இத்தகைய இன்னல்கள் ஏற்படுகின்றன என்று எனக்குத் தெரியும். இது மட்டும் அல்ல பொருளாதார ரீதியாகவும் சில கிராமங்கள் பாதிக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் போக்கப்பட வேண்டும் என்ற காரணத்தினால்தான, இதை Unserved Road village, Inadequately served village and Excessively Served village பேருந்து இல்லாதிருக்கக்கூடிய வழித்தடங்கள், சரிவர பேருந்துகள் இல்லாத வழித்தடங்கள்,—அதாவது மிகக் குறைவாக பேருந்துகள் உள்ளவை, அதிகமாக பேருந்துகள் உள்ள வழித்தடங்கள் என்று பிரிக்கப்பட்டு, அந்த இடங்களில் பேருந்துகளை விடுவதற்கு அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

6- அரசினர் சட்ட முன் வடிவுகள்

(அ) பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவா அவர்களே, ''தமிழ்நாடு 1979—ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1979) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்'' என்று முன் மொழிகிறேன்.

*1979, பிப்ரவரி 19-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS